## மறுவாழ்வுத்துறை சார்ந்த நிபுணர்கள்




## NIEPMDல் உள்ள சேவைகள்

ஆரம்பகால சிகிச்சை (EI)

முன்பருவ குழந்தை சிறப்புக் கல்வி (ECSE)

சிறப்புப்பள்ளி (Special School)

தொழில்வழி சிகிச்சை (Occupational Therapy)

தொழில்கல்விப் பயிற்சி (Vocational Training)

பயிற்சி சிகிச்சை மையம் (Therapeutics)

மறுவாழ்வு உளவியல் சேவை (Rehabilitation Psychology)

மருத்துவ சேவை (Medical Services)

## மேலும் தகவல்களுக்கு

www.nimhindia.org

www.nationaltrust.org

www.disabilityindia.org/trustact



ஒன்றுக்கும் மேற்பட்ட ஊனமுற்றோரை மேம்படுத்துவதற்காக, ஒன்றுக்கும் மேற்பட்ட ஊனமுற்றோருக்கான தேசிய நிறுவனத்தை மனிதவள தேசிய ஆதார மையமாக செயல்படுத்தும் குறிக்கோளுடன் இந்திய அரசின் மாற்றுத்திறனாளி விவகாரங்கள் துறை சமூக நீதி மற்றும் அதிகாரம் வழங்கலுக்கான அமைச்சகம், இந்நிறுவனத்தை தமிழ்நாட்டில் சென்னையில் கிழக்கு கடற்கரை சாலையில் அமைத்துள்ளது. (சென்னை மத்திய இரயில் நிலையம், பேருந்து நிலையம் மற்றும் விமான நிலையத்தில் இருந்து சுமார் 30 கி.மீ.)



# மனவளர்ச்சி குன்றிய தன்மை

# (Mental Retardation)



SCAN QR CODE
TO DOWNLOAD
BROCHURE

ஒன்றுக்கும் மேற்பட்ட ஊனமுற்றோரின்
மேம்பாட்டிற்கான தேசிய நிறுவனம்

(மாற்றுத்திறனாளி விவகாரங்கள் துறை, சமூக நீதி மற்றும்
அதிகாரம் வழங்கல் அமைச்சகம், இந்திய அரசு)

கிழக்கு கடற்கரை சாலை, முட்டுக்காடு, கோவளம் அஞ்சல்,
சென்னை - 603 112. தமிழ்நாடு.

தொலை பேசி : 044-27472046, 27472113

தொலை நகல் : 044-27472389

மின் அஞ்சல்: niepmd@gmail.com, மின் அலை: www.niepmd.tn.nic.in

**வேலை நேரம்**

திங்கள் - வெள்ளி

காலை 9 மணி முதல் மாலை 5.30 மணி வரை

**விடுமுறை**

சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை மற்றும் மத்திய அரசு விடுமுறை நாட்கள்

மாற்றுத் திறனாளிகள் பயன்படுத்தும் வகையில் சிறந்த இணையதளம் (வெப்சைட்) உருவாக்கியதற்கான தேசிய விருது (2011) மற்றும் மாற்றுத் திறனாளிகள் எந்த தடையும் இன்றி செல்லும் வகையில் சிறந்த கட்டமைப்பை ஏற்படுத்தியதற்காக தேசிய விருது (2012) பெற்ற நிறுவனம்.

## மறுவாழ்வுத்துறை சார்ந்த நிபுணர்கள்




## NIEPMDல் உள்ள சேவைகள்

ஆரம்பகால சிகிச்சை (EI)

முன்பருவ குழந்தை சிறப்புக் கல்வி (ECSE)

சிறப்புப்பள்ளி (Special School)

தொழில்வழி சிகிச்சை (Occupational Therapy)

தொழில்கல்விப் பயிற்சி (Vocational Training)

பயிற்சி சிகிச்சை மையம் (Therapeutics)

மறுவாழ்வு உளவியல் சேவை (Rehabilitation Psychology)

மருத்துவ சேவை (Medical Services)

## மேலும் தகவல்களுக்கு

www.nimhindia.org

www.nationaltrust.org

www.disabilityindia.org/trustact



ஒன்றுக்கும் மேற்பட்ட ஊனமுற்றோரை மேம்படுத்துவதற்காக, ஒன்றுக்கும் மேற்பட்ட ஊனமுற்றோருக்கான தேசிய நிறுவனத்தை மனிதவள தேசிய ஆதார மையமாக செயல்படுத்தும் குறிக்கோளுடன் இந்திய அரசின் மாற்றுத்திறனாளி விவகாரங்கள் துறை சமூக நீதி மற்றும் அதிகாரம் வழங்கலுக்கான அமைச்சகம், இந்நிறுவனத்தை தமிழ்நாட்டில் சென்னையில் கிழக்கு கடற்கரை சாலையில் அமைத்துள்ளது. (சென்னை மத்திய இரயில் நிலையம், பேருந்து நிலையம் மற்றும் விமான நிலையத்தில் இருந்து சுமார் 30 கி.மீ.)



# மனவளர்ச்சி குன்றிய தன்மை

# (Mental Retardation)



NIEPMD

ஒன்றுக்கும் மேற்பட்ட ஊனமுற்றோரின் மேம்பாட்டிற்கான தேசிய நிறுவனம்

(மாற்றுத்திறனாளி விவகாரங்கள் துறை, சமூக நீதி மற்றும் அதிகாரம் வழங்கல் அமைச்சகம், இந்திய அரசு)

கிழக்கு கடற்கரை சாலை, முட்டுக்காடு, கோவளம் அஞ்சல், சென்னை - 603 112. தமிழ்நாடு.

தொலை பேசி : 044-27472046, 27472113

தொலை நகல் : 044-27472389

மின் அஞ்சல்: niepmd@gmail.com, மின் அலை: www.niepmd.tn.nic.in

வேலை நேரம்

திங்கள் - வெள்ளி

காலை 9 மணி முதல் மாலை 5.30 மணி வரை

விடுமுறை

சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை மற்றும் மத்திய அரசு விடுமுறை நாட்கள்

மாற்றுத் திறனாளிகள் பயன்படுத்தும் வகையில் சிறந்த இணையதளம் (வெப்சைட்) உருவாக்கியதற்கான தேசிய விருது (2011) மற்றும் மாற்றுத் திறனாளிகள் எந்த தடையும் இன்றி செல்லும் வகையில் சிறந்த கட்டமைப்பை ஏற்படுத்தியதற்காக தேசிய விருது (2012) பெற்ற நிறுவனம்.

## மனவளர்ச்சி குன்றிய தன்மை

மனவளர்ச்சி குன்றிய தன்மை என்பது ஒரு மனிதனின் மனசெயல்பாட்டுதிறன், பேச்சு, மொழித்திறன், தன் சுய கவனிப்புத் திறன் மற்றும் சூழ்நிலைத்திறனில் உள்ள தடை அல்லது பின் தங்கிய நிலையே ஆகும். மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் பேசுவதற்கும், தானாக நடப்பதற்கும், தன் சுய தேவைகளை கவனித்துக் கொள்வதற்கும் நீண்ட நாட்கள் தேவைப்படுகிறது.

## மனவளர்ச்சி குன்றிய தன்மையின் விகிதாசாரம்

தேசிய குறியீட்டு ஆய்வுக் கழகத்தின் ஆய்வு அறிக்கை 2002-ன் படி இந்தியாவில் மொத்த மக்கள் தொகையில் 0.923% குழந்தைகள் மனவளர்ச்சி குன்றியவர்கள் என கணக்கிடப்பட்டுள்ளது.

## மனவளர்ச்சி குன்றிய தன்மைக்கான காரணங்கள் கர்ப காலத்தின்போது

- தாய்க்கு ஏற்படும் தொற்று நோய்கள்
- தாயின் உடல் நலக் குறைவுகள்
- பரம்பரை மற்றும் மரபியல் குறைபாடுகள்
- விபத்து மற்றும் பிற காரணங்கள்

## குழந்தை பிறக்கும்போது

- குழந்தை குறைபிரசவத்தில் பிறத்தல்
- குழந்தை சுவாசிக்க இயலாமை
- பிறப்பின் போது குழந்தைக்கு தலையில் ஏற்படும் காயம் மற்றும் மஞ்சள் காமாலை

## குழந்தை பிறந்தபின்

- உணவு மற்றும் சத்துப் பற்றாக்குறை
- தொற்று நோய்கள்
- வலிப்பு நோய்
- மூளையில் காயம் ஆகியவற்றினால் மனவளர்ச்சி குன்றியத்தன்மை ஏற்படுகிறது.



## மனவளர்ச்சி குன்றியவர்களின் குணாதிசயங்கள்

- தலை நிற்பதிலும், உட்காருவதிலும், மண்டியிடுவதிலும், நிற்பதிலும் மற்றும் நடப்பதிலும் தாமதம் காணப்படுதல்.
- மொழித்திறன் வளர்ச்சியில் தாமதம் காணப்படுதல்.
- ஞாபகசக்தி குறைபாடு
- சூழ்நிலை கட்டளைகளை புரிந்துகொள்வதில் சிரமம்.
- பிரச்சனைகளை தீர்ப்பதிலும் சிரமம்.
- முடிவு எடுப்பது மற்றும் தெளிவான எண்ணங்கள் இல்லாமை.
- சூழ்நிலைக்கு ஏற்ப ஒத்து போகாதல் மற்றும் மாறுபட்ட செயல்திறன் செய்தல்.
- கவனச் சிதறல் மற்றும் குறைவான கவனம் கொண்டிருத்தல்
- நடத்தைகள் / பழக்கவழக்கங்களின் குறைபாடு காணப்படுதல்
- கற்றுக் கொள்வதில் தாமதம் காணப்படுதல்.
- பள்ளிக் கல்வியில் பின்தங்கிய நிலை.
- ஒத்தமைந்த குறைபாடுகளான பார்வைத்திறன் இன்மை, காதுகேளாமை மற்றும் மூளை முடக்குவாதம் பாதிப்பு காணப்படுதல்.
- ஒத்தமைந்த பிரச்சனைகளான வலிப்பு மற்றும் துறுதுறுத் தன்மை காணலாம்.

இவற்றில் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட காரணங்கள் குழந்தைக்கு இருக்குமானால், இத்துறையை சார்ந்த நிபுணர்களின் உதவியை நாட வேண்டும்.

## மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான பயிற்சி முறைகள்

மனவளர்ச்சி குன்றியத்தன்மை என்பது ஒரு நிலை. இதை குணப்படுத்தவோ அல்லது மாற்றி அமைக்கவோ இயலாது. ஆனால் மறுவாழ்வுத் துறைச் சார்ந்த நிபுணர்களின் பயிற்சியின் மூலம் இவர்களின் சுய தேவைபாடுகளை தானாக பூர்த்தி செய்து கொண்டு சுதந்திரமாக செயல்பட வைப்பதின் மூலம் அவர்களின் வாழ்க்கை திறனை உயர்த்த முடியும்.

மனவளர்ச்சி குன்றியோரை முன்னேற்ற பல்வேறு செயல்கள் இருப்பினும், சிலவற்றை இங்கே காணலாம்

- தன் சுய தேவைகளை பூர்த்தி செய்வதற்கான பயிற்சி
- பிறருடன் தகவல் பரிமாற்றம் செய்தல்.
- உடல் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு.
- வீட்டு வேலை செயல்திறன் பயிற்சி.
- சூழ்நிலைத் திறன் பயிற்சி. (பழகும் விதம், குழுவுடன் சேர்ந்து இருத்தல் மற்றும் விளையாட்டில் பங்கேற்று விளையாடுதல்.
- படித்தல், எழுதுதல் மற்றும் அடிப்படை கணிதம் செய்தல் போன்றவற்றை நாம் முன்னேற்ற முடியும்.

